மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.மஎண்.12/2024
உள்
அசல் வழக்கு எண்.28/2018
--------

சீனியம்மாள் ... மனுதாரர்/8 ம் பிரதிவாதி

/எதிர்/

நாராயணசாமி ... எதிர்மனுதாரர்/வாதி

ராமசாமி செட்டியார்
ரவிப்பாண்டியன்
சீனிவாசன்
கண்ணன்
சுப்பம்மாள்
சீனிவாசன்
ஜெயலட்சுமி .. பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 20.06.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. மாரிச்சாமி, அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. என். மணிகண்டன், பி.ஏ., எல்எல்.பி., அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும். . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்ய அசல் வழக்கினை மறுதிறவு செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–**

2.1. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 8ம் பிரதிவாதி. அசல் வழக்கானது வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இந்தநிர் வழக்கானது வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ 10.06.2024ம் தேதி சாட்சிய விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சியம் அளிக்காமலும் அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுவிட்டது. மேற்படி செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான ஒன்றாகும். அதனால் அசல் வழக்கினை மறுதிப்பு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாயும் நியாயமாயும் உள்ளது. இல்லாது போனல் மனுதாரருக்கு அநேக இன்னலும் இழப்பும் ஏற்படக்கூடியதாக உள்ளது. எனவே மனுதாரரால் மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் –**

3.1. கடந்த 05.08.2024ம் தேதி தாக்கல் செய்த இடைமனு, அசல் வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்துடன் தாக்கல் செய்யபப்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். இ.ம.எண்.08/2023 உத்தரவுப்படி பி.வா.சா.1–ஐ அசல் வழக்கில் மறுதிறப்பு செய்யப்பட்டு, கடந்த 10.06.2024ம் தேதியில் மறு குறுக்கு விசாரணை நடத்தப்பட்ட சமயம் இடைமனுதாரர் பி.வா.சா.1 ஐ விசாரணைசெய்திருக்க முடியும். ஆனால் வேண்டுமென்றே தவிர்த்துவிட்டு தற்போது மீண்டும் பி.வா.சா.1–ஐ மறுதிறப்பு செய்ய இடைமனு தாக்கல் செய்திருப்பது அசல் வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கமே தவிர வேறொன்றும் இல்லை. அதனால் பி.வா.சா.1 ஐ மீண்டும் மறுதிறப்பு செய்ய போதிய முகாந்திரம் இல்லாததால் ஆட்சேபணை செய்யப்படுகிறது. எனவே இந்த இடைமனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) **5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 மற்றும் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ணப்ட்ட எதிருரையின் சுருக்கம்**:–

**4.1.** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள்

தவிர ஏனைய சங்கதிகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாய் இல்லை. மனுதாரர்/9ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவில் குறுந்தலைப்பில் சீனியம்மாள், மனுதரர்/8ம் பிரதிவாதி என்றும், மனுவின் பாரா 1ல் நான் இந்தநிர் மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 8ம் பிரதிவாதி என்றும், நான், 9. 10 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன் என்றும், மற்றும் பாரா 1–லும் குறுந்தலைப்பிலும் மனுதாரர்/9ம் பிரதிவாதி ஆவார். ஆனால் தவறாக மனுதாரர் /8ம் பிரதிவாதி என்றும் பாரா 1ல் 8ம் பிரதிவாதி தரப்பில் அபிடவிட் மற்றும் 9, 10 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து என தான் எந்த பிரதிவாதி என்று தெரியாமலே மனு தாக்கல் செய்திருப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

**4.2.** கடந்த 10.06.2024ம் தேதி பி.வா.சா.1 ஐ விசாரிக்காமல் போனதற்கு தகுந்த காரணங்கள் எதுவுமே குறிப்பிடாமல் மனு தாக்கல் செய்திருப்பதிலிருந்து இந்த 1ம் பிரதிவாதியை அலைக்கழிவு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், 1ம் பிரதிவாதி மூத்த குடிமகன் ஆவார். தற்போது திருப்பூரில் மகளின் அடைக்கலத்தில் இருந்து வரும் நிலையில் வீண் அலைக்கழிவு செய்து உடல்நலக்குறைவு ஏற்படுத்தி வீண் கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், அசல் வழக்கின் வாதியும், இம்மனுவின் மனுதாரரும் கூட்டு சேர்ந்து கொண்டு பி.வா.சா.1–யை அலைக்கழிவு செய்யவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பி.வா.சா.–1 யை குறுக்கு விசாரணை செய்யாமல் இந்த வழக்கை முடிவுற செய்யக்கூடாது என்றும், நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தையும், வயது முதிர்ந்த பி.வா.சா.1–யை அலைக்கழிவு செய்ய வேண்டும், உடல் நலக்குறைவு ஏற்படுத்த வேண்டுமென்றும் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை வாதியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தாக்கல் செய்தது ஏற்புடையதாக இல்லை. எனவே மனுதாரரின் மனுவை இந்த 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடும்படி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>தீர்வு</u>**

**7.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 8 ம் பிரதிவாதி. அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்ய அசல் வழக்கினை மீண்டும் மறுதிறவு செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு சொல்லும் காரணம் என்னவென்றால் வாதி தரப்பில் பி.வா.சா.1–யை கடந்த 10.06.2024 ம் தேதியில் சாட்சிய விசாரணை செய்யப்பட்டு எனது தரப்பில் பி.சா.வா.1 யை குறுக்கு விசாரணை வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சியம் அளிக்காமலும், அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்பதால் பி.வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்து அசல் வழக்கினை மீண்டும் மறுதிறவு செய்ய வேண்டி இந்த மனு.

**7.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் அசல் வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்திலும், 1ம் பிரதிவாதி மூத்த குடிமகன் என்பதாலும், தற்போது திருப்பூரில் மகளின் அடைக்கலத்தில் இருந்து வரும் நிலையில் வீண் அலைக்கழிவு செய்து உடல்நலக்குறைவு ஏற்படுத்த வேண்டுமென்றும் தாக்கல் செய்துள்ள மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

**7.3.** மனு மற்றும் அசல் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ஏற்கனவே 1ம் பிரதிவாதியை விசாரிக்க வேண்டி இ.ம.எண்.08/2023–ல் தாக்கல் செய்யப்பட்ட மறு திறவு மனுவும் இ.ம.எண்.09/2023 ல் தாக்கல் செய்யப்பட்டு மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் அனுமதிக்கப்பட்டு, கடந்த 10.06.2024 ல் பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்த போது இந்த மனுதாரர்கள் /9 முதல் 11 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துள்ளனர். மேலும் பி.வா.சா.1 மூத்த குடிமகன், 86 வயதுமிக்க முதியவர் தனது மகளின் அடைக்கலத்தில் வாழ்ந்து வரும் நிலையில் இருந்தபோதிலும் விசாரணையை திறம்பட எடுத்துச் சொல்லும் பொருட்டு வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர் தன்னுடைய வழக்கை நிரூபிக்க பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்து அசல் வழக்கினை மறுதிறவு செய்ய வேண்டியது அவசியம் என

இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7.4.** பி.வா.சா–1ன் வயது மூப்பு, உடல் நிலையை கருத்தில்கொண்டும், இந்த மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கும், மனுதாரர் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**8. இறுதி முடிவு**

இறுதியாக, மனுதாரர், இந்த மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை ரூ.1000/–ஐ வரும் 18.07.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 18.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 08ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :

இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :

இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

I.A.No.12/2024 in OS 28/2018 08.07.2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.12/2024
உள்
அ.வ.எண்.28/2018
**<u>உத்தரவு</u>**
நாள்– 08.07.2025.